07/11/89

# தடுத்தாட்கொண்ட புராணம்

பல்கலைக்கழக உள்வாரி / வெளிவாரிப்
பட்டதாரி மாணவருக்கான பாடநூல்.


நூலுருவாக்கம்;
கனகசபாபதி நாகேஸ்வரன் B. A. (Hons.), M. A. (Cey.)
உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.



யாழ்ப்பாணம், கொக்குவில் - மணியர்பதி
அமரர்களான
திருவாளர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம்
திருமதி சுப்பிரமணியம் பவளம் தம்பதியின்
நினைவு வெளியீடு
30 - 09 - 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106

உ

சிவமயம்

# தடுத்தாட்கொண்ட புராணம்

பல்கலைக்கழக உள்வாரி / வெளிவாரிப்
பட்டதாரி மாணவருக்கான பாடநூல்.

நூலுருவாக்கம்:
கனகசபாபதி நாகேஸ்வரன் B. A. (Hons.) M.A. (Cey.)
உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம், கொக்குவில் - மணியர்பதி
அமரர்களான
திருவாளர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம்
திருமதி சுப்பிரமணியம் பவளம் தம்பதியின்

## நினைவு வெளியீடு

30 - 09 - 89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 1989

நூலுருவாக்கம்:
கனகசபாபதி நாகேஸ்வரன் B.A. (Hons.), M.A. (Cey.)
உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

பதிப்புரிமை: ஆசிரியருக்கே

அச்சுப் பதிப்பு: ஸ்ரீ வாலாம்பிகா அச்சகம்
422, காங்கேயன்துறை வீதி
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 20-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் கலாநிதி
**ஆ. வேலுப்பிள்ளை B.A .(Hons.), Ph.D(Cey.), D.Phil (Oxon)**
இலக்கிய வரலாற்று வழிநின்று எழுதியுள்ள

# பெரியபுராண ஆராய்ச்சிப்பார்வைகள்

சேக்கிழாரின் பெரியபுராணம் பல்லவர்காலத் தமிழ் நாட்டின் வரலாருக அமைந்திருக்கிறது என்று அபிப்பிராயப் படுபவர் சிலர். அந்த அபிப்பிராயத்தில் உண்மை இல்லாமல் இல்லை. பல்லவர் காலத் தமிழ்நாட்டு வரலாறு வரைய முற்படுவோருக்கு வேண்டிய பல விடயங்கள் பெரியபுராணத்திற் காணப்படுகின்றன. அக்காலச் சமய வரலாற்றை ஆராய்வதற்கு வேண்டும் விடயங்கள் பலவும் அங்கு விரிவாகப் பேசப்படுகின்றன. பாமர மக்களையும் உள்ள முதிர்ச்சி பெருதவர்களையும் கவர்வதற்கு அற்புத சம்பவங்களைக் கோவைப்படுத்திக் கூறுவது சிறந்த வழியாகும். சமய வரலாறு கூறும் பண்டைய நூல்கள் இவ்வாறே பெரும்பாலும் அமைந்தன.

பெரியபுராணத்தின் கண்ணே திருவிளையாடற் புராணம் முதலியவற்றிலும் பார்க்க எவ்வளவோ அதிக வரலாற்றுணர்ச்சி காணப் படுகிறது. தமிழிலக்கிய வரலாற்றில் சேக்கிழார் சாதனை என்ன என்பது சுலபமாக முடிவு கட்டக்கூடியதன்று. மகாவம்சத்திற்கு அவர் கடமைப் பட்டுள்ளாரா என்பது நன்கு ஆராய்ந்து தீர்மானிக்கப்பட வேண்டியதாகும். சீவகசிந்தாமணிக்குப் போட்டியாக எழுந்ததே பெரியபுராணம் என்று கூறப்படுகிறது. சீவகசிந்தாமணியைப் பின்பற்றிப்போலும் சேக்கிழாரும் தம்முடைய நூலைப் பதின் மூன்று பகுதிகளாகப் பிரித்திருக்கின்ருர். திருத்தக்க தேவர் பயன் படுத்திய யாப்பையே சேக்கிழாரும் கையாண்டார். சிந்தாமணியில் முதன்முதல் கையாளப்படும் சொற்ருெடர்கள் பல சேக்கிழாரால் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

பெரியபுராணம் கூறும் நாயன்மார் வாழ்க்கைச் சம்பவங்கள் பல நாயன்மார் வாழ்க்கையில் நடைபெற்றிருக்கக் கூடுமா என்ற சந்தேகம் எழுவதுண்டு. ஆயின் இக்கதைகள் சேக்கிழாரின் கற்பனையிலெழுந்தவை என்பதும் பொருந்தாது.

சுந்தரர் காலத்தில் நாயன்மார் வாழ்க்கை பற்றிய அற்புதக் கதைகள் சில மக்களிடையே வழங்கியிருக்கின்றன. சுந்தரர் அவற்றைத் தம் பாடல்களில் அமைத்தார். மூவர் விக்கிரகங்கள் கோயில் அமைத்துப் பூசிக்கப்பட்டு விழா எடுக்கப்பட்ட காலத்தில் நம்பி சுந்தரர் கூறியதோடு தம் திருமுறை ஆராய்ச்சியிற் புலப்பட்டதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் தம் காலத்துப் பல்கிப்பெருகிய கதைகளையும் எடுத்துக் கூறியுள்ளார். இவர்களைப் பின்பற்றியும் சோழப்பேரரசின் அமைச்சராகத் தமிழ்நாடு முழுவதுஞ் சென்று தாம் ஆராய்ந்துகண்ட விடயங்கள் சிலவற்றைச் சேர்த்தும், தம் காலத்தில் புதிதாகக் கிளைத்திருந்த நாயன்மார் பற்றிய புதிய கதைகளைச் சேர்த்தும் சேக்கிழார் காவியஞ் செய்திருக்கிறார். மக்கள் மனதைக் கவர்ந்த கதை கிளைக்கதை பெற்று வளர்வது இலக்கிய வரலாறுகளில் ஒரு புதுமையல்ல.

சைவருடைய பக்தியியக்கம் பெரியபுராணத்திற் பூரணத்துவம் பெற்றது போலவே வைணவருடைய பக்தியியக்கம் கம்பராமாயணத்திற் பூரணத்துவம் பெற்றது.

கி.பி. பத்தாம் நூற்றாண்டு இறுதிவரையிலே அனுராதபுரம் சிங்கள மன்னர்களின் இராசதானியாக இலங்கையின் தலைநகராகத் திகழ்ந்தது. தலைநகரென்ற முறையிலே இலங்கைத் தமிழருட் சிலர் அங்கு சென்று வசித்திருப்பர். தென்னிந்தியர்களும் வணிகம் முதலிய காரணங்களோடு வந்து சேர்ந்திருப்பர். பெருங் கற்பண்பாட்டுச் சின்னம் அனுராதபுரத்திலுங் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் திராவிடப் பழங்குடிகள் மிகப்பழங் காலத்திலிருந்து அப்பிரதேசத்திலே வாழ்ந்து வந்திருக்கவுங் கூடும். எனவே சாசனங்களிலே சம்பந்தப்பட்டவர்கள் யார் என்ற வினா எழுகின்றது. இந்துக்கோவில் சம்பந்தப்பட்ட கொடையாளிகளை எடுத்துக் கொண்டால், இருவருடைய பெயர்களிலும் 'சேக்கிழான்' என்பது காணப்படுகிறது. சேக்கிழான் என்பது ஒரு குடிப்பெயர். நான்கு குடிகளாக அமையும் தொண்டை மண்டல முதலியார்களுள்ளே 'சேக்கிழான்' என்பது ஒருகுடி. பல்லவ காலத்திலே பல்லவப் பேரரசுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தது வரலாற்றுண்மை. தொண்டை மண்டலத்திலிருந்து வணிக நிமிர்த்தம் அனுராதபுரத்தில் வந்து குடியேறியவராகவோ அல்லது வந்து குடியேறினவரின் பரம்பரையினராகவோ சாசனங்களிற் குறிக்கப்படும் சேக்கிழார்கள் இருக்கலாம், 'சேக்கிழான்' என்பது முதலியார் குடிப்பெயரென்பதால் "சேக்கிழான் செட்டிகங்கன்" என்ற பெயரில் வரும் செட்டி என்பது வணிகன் என்ற சொல்லுப்பொருளையுடையதென்று கொள்ளவேண்டும். சேக்கிழான் சென்னை என்ற ஆட்பெயரில் வரும் சென்னை என்பது தமிழ் நாட்டின் தலைநகராகிய தொண்டை மண்டலத்துச் சென்னைக்கு இடப்பெயராகக் காணப்படுகிறது. சென்னை என்ற ஊர்ப்பெயரின் வரலாறு இன்று சிலராற் சிறிது வேறுபடக் கூறப்படுமாயினும், ஆட்பெயர், ஊர்ப்பெயராக வந்திருக்கக் கூடுமா என்பது ஆராயத் தக்கது. பெரியபுராணம் பாடிய சேக்கிழார் அருள்மொழித்தேவரின் ஊராகிய குன்றத்தூர் இன்றைய சென்னைப் பட்டினத்துக்குள் அடங்கியுள்ளது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியில்
தமிழையும் இந்துநாகரிகத்தையும் தத்தமது
பாடங்களாக விரும்பிப் பயிலும்
பட்டதாரி மாணவ மாணவியரின்
பாடநூல் தேவையினைக் கருதி
அவர்கட்கு உதவும் பொருட்டு
இந்நூல் வெளியிடப்படுகின்றது.


எம்மைப் பல்கலைக்கழகக் கல்விவரை கற்பித்த
எமது பெற்றோர், காலஞ்சென்ற
**திரு. வைத்திலிங்கம் சுப்பிரமணியம்**
**திருமதி சுப்பிரமணியம் பவளம்**
ஆகியோரின் நினைவாக இந்நூல் சமர்ப்பணம்.

சுப்பிரமணியம் பாக்கியநாதன் B.A.
பாக்கியநாதன் விக்கினேஸ்வரி B.A.
பா. வித்ஜா
பா. சிந்துஜா
(மேற்கு ஜேர்மனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திருவாளர்
# வைத்திலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள்


மண்ணில் 24 - 06 - 1909

விண்ணில் 22 - 06 - 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# திருமதி சுப்பிரமணியம் பவளம் அவர்கள்

மண்ணில்: 10-06-1917

விண்ணில் 22-11-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தடுத்தாட்கொண்ட புராணம்

கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதிஇரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடி நாடு. 1

பெருகிய நலத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி வாய்மை குன்றுத்
திருமறை யவர்கள் நீடும் திருநாவ லூராம் அன்றே. 2

மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானி யார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருஅவ தாரம் செய்தார். 3

தம்பிரான் அருளி னாலே தவத்தினால் மிக்கோர் போற்றும்
நம்பியா ரூரர் என்றே நாமமும் சாத்தி மிக்க
ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொன்நாண் அரையில் மின்னத் தெருவில்தேர் உருட்டு நாளில். 4

நரசிங்க முனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பி னாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப அன்பினால் மகன்மை கொண்டார். 5

பெருமைசால் அரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்
வருமுறை மரபில் வைகி வளர்த்துமங் கலஞ்செய் கோலத்(து)
அருமறை முந்நூல் சாத்தி அளவில் தொல்லைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவம் சேர்ந்தார். 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் சடையனார் தாம் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துள் தங்கள் அரும்பெரும் மரபுக் கேற்ப
வந்ததொல் சிறப்பின் புத்தூர்ச் சடங்கவி மறையோன் தன்பால்
செந்திரு அனைய கன்னி மணத்திறம் செப்பி விட்டார். 7

குலமுதல் அறிவின் மிக்கோர் கோத்திர முறையும் தேர்ந்தோர்
நலமிகு முதியோர் செல்லச் சடங்கவி நன்மை ஏற்று
மலர்தரு முகத்தன் ஆகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசிஒத்த பண்பினால் அன்பு நேர்ந்தான். 8

மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல் தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றக்
கொற்றவர் திருவுக்கேற்பக் குறித்து நாள் ஓலை விட்டார். 9

மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
அங்கயல் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர் சோலை மூதூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து கொண்டார். 10

மகிழ்ச்சியால் மணமீக் கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழிலர் ஆகி
இகழ்ச்சியொன் றானும் இன்றி ஏந்து பூமாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள்முளை சாத்தி னார்கள். 11

மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தோர் செய்யத்
துணைமலர்க் கோதைத் தாமச் சுரும்பணை தோளி னானைப்
புணர்மணத் திருநாள் முன்னாட் பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொன்நாண் காப்புச் சேர்த்தார். 12

மாமறை விதிவ ழாமல் மணத்துறைக் கடன்கள் ஆற்றித்
தூமறை மூதூர்க் கங்குல் மங்கலம் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயஞ் செய்தான். 13

காலைசெய் வினைகள் முற்றிக் கணிதநூற் புலவர் சொன்ன
வேலைவந் தணையா முன்னர் விதிமணக் கோலம் கொள்வான்
நூலசைந் திலங்கு மார்பின் நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை அடுத்த தூநீர்ப்
பாசனத் தமைத்த பாங்கர்ப் பருமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தணிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக் கினியான் மேனி எழில்பெற விளக்கி னார்கள். 15

அகில்விரைத் தூபமேய்ந்த அணிகொள்பட் டாடை சாத்தி
முகில்நுழை மதியம்போலக் கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித்தன் தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி ஒளிர்நறுஞ் சிகழி ஆர்த்தான். 16

தூநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்டி அமைத்தசந் தனச்சே றூட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பான்மறை முன்னூல் மின்னப் பவித்திரம் சிறந்த கையான். 17

தூமலர்ப் பிணையல் மாலை துணர்இணர்க் கண்ணி கோதை
தாமம்என் றினைய வேறு தகுதியால் அமையச் சாத்தி
மாமணி அணிந்த தூய வளர்ஒளி இருள்கால் சீக்கும்
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலம் கொண்டார். 18

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர், நாதன்
தன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார். 19

இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி எடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை ஒலியின் ஓங்க
வியந்துபார் விரும்ப வந்து விரவினர்க் கின்பஞ் செய்தே
உயந்தவா கனயா னங்கள் மிசைக்கொண்டார் உழையரானோர். 20

மங்கல கீத நாத மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையும் சூழ்ந்த மைந்தரும் துவன்றிச் சூதும்
பங்கய முகையும் சாய்த்துப் பணைத்தெழுந் தணியில் மிக்க
குங்கும முலையி னாரும் பரந்தெழு கொள்கைத் தாகி. 21

அருங்கடி எழுந்த போழ்தின் ஆர்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலும் இலங்கொளி மணிக ளாலும்
நெருங்கிய பீலிச் சோலை நீள்நிறத் தரங்கத் தாலும்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த தன்றே. 22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்குதூ ரியங்கள் ஏங்க நிரைத்தசா மரைகள் ஓங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிகள் ஆட
அருங்கடி மணம்வந் தெய்த அன்றுதொட் டென்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூர் ஆமால். 23

நிறைகுடம் தீபம் தூபம் நெருங்குபா லிகைகள் ஏந்தி
நறைமலர் அறுகு சுண்ணம் நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளல் மணம்எதிர் கொள்ள வந்தார். 24

''கண்கள் எண்ணிலாத வேண்டும் காளையைக் காண'' என்பார்
''பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை'' என்பார்
''மண்களி கூர வந்த மணம்கண்டு வாழ்ந்தோம்'' என்பார்
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடுவார்கள். 25

'ஆண்டகை அருளின் நோக்கின் வெள்ளத்துள் அலைந்தோம்' என்பார்
''தாண்டிய பரியும் நம்பால் தகுதியின் நடந்த'' தென்பார்
''பூண்டயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி'' என்பார்
ஈண்டிய மடவார் கூட்டம் இன்னன இசைப்பச் சென்றார். 26

வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்றுவெண் சங்கம் எங்கும்
பெருமழைக் குலத்தின் ஆர்ப்பப் பரிமிசை இழிந்து பேணும்
ஒருமணத் திறத்தின் அங்கு நிகழ்ந்தது மொழிவேன் உய்ந்தேன். 27

ஆலுமறை சூழ்கயிலை யின்கண் அருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற எழுந்துமிகு கீழுற அகழ்ந்து
மாலும்அய னுக்கும் அரி யார்ஒருவர் வந்தார். 28

கண்ணிடை கரந்தகதிர் வெண்படம் எனச்சூழ்
புண்ணிய நுதல்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. 29

காதிலணி கண்டிகை வடிந்தகுழை தாழச்
சோதிமணி மார்பின்அசை நூலினெடு தோளின்
மீதுபுனை உத்தரிய வெண்துகில் நுடங்க
ஆதப மறைக்குடை அணிக்கரம் விளங்க, 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிசேரி கோவண உடைபழமை கூரக்
கொண்டதொர் சழங்கலுடை ஆர்ந்தழகு கொள்ள
வெண்துகில் உடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழல் தள்ளுநடை கொள்ள. 31

மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடம்என ஐயமுற எய்தி. 32

வந்துதிரு மாமறை மணத்தொழில் தொடங்கும்
பந்தரிடை நம்பிஎதிர் பன்னுசபை முன்னின்(று)
''இந்தமொழி கேண்மின்எதிர் யாவர்களும்'' என்றான்
முந்தைமறை ஆயிரம் மொழிந்த திருவாயான். 33

என்றுரைசெய் அந்தணனை எண்ணில் மறையோரும்
மன்றல்வினை மங்கல மடங்கலனை யானும்
''நன்றுமது நல்வரவு நங்கள்தவம் என்றே
நின்றதிவண் நீர்மொழிமின் நீர்மொழிவ'' தென்றார். 34

பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
''என்னிடையும் நின்னிடையும் நின்றஇசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயல்தி'' என்றான். 35

நெற்றிவிழி யான்மொழிய நின்றநிகர் இல்லான்
''உற்றதோர் வழக்கெனிடை நீயுடைய துண்டேல்
மற்றது முடித்தலது யான்வதுவை செய்யேன்;
முற்றஇது சொல்லு'' கென எல்லைமுடி வில்லான். 36

''ஆவதிது கேண்மின்மறை யோர்! என்அடி யான்இந்
நாவல்நகர் ஊரன்இது நான்மொழிவ'' தென்றான்
தேவரையும் மாலயன் முதல்திருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான். 37

**என்றான் இறையோன் அதுகேட்டவர் எம்ம ருங்கும்**
**நின்றார் இருந்தார் ''இவன் என்நினைந் தான்கொல் என்று''**
**சென்றார் வெகுண்டார் சிரித்தார், திருநாவ லூரான்**
**''நன்றால் மறையோன் மொழி'' என்றெதிர் நோக்கி நக்கான். 38**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கான் முகம்நோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத் தரியத்துகில் தாங்கி மேற்சென்(று)
''அக்கா லம்உன்தந்தை தன்தந்தை ஆள்ஓலை ஈதால்
இக்கா ரியத்தை இன்றுநீ சிரித்ததேன் ஏட'' என்ன. 39

மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியாம் சிரிப்பு நீங்கி
''ஆசில்அந் தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமைஆதல்
பேசஇன் றுன்னைக்கேட்டோம் பித்தனோ மறையோன்'' என்றார். 40

''பித்தனும் ஆகப்பின்னும் பேயனும் ஆக நீயின்(று)
எத்தனை தீங்கு சொன்னால் யாதுமற் றவற்றால் நாணேன்
அத்தனைக் கென்னை ஒன்றும் அறிந்திலை யாகில் நின்று
வித்தகம் பேசவேண்டாம் பணிசெய வேண்டும்'' என்றார். 41

''கண்டதோர் வடிவால் உள்ளம் காதல்செய் துருகா நிற்கும்;
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமும் உடனே ஆக்கும்
உண்டொராள் ஓலை என்னும் அதன் உண்மை அறிவேன்'' என்று
தொண்டனார் ''ஓலை காட்டு'' கென்றனர் துணைவ னாரை. 42

''ஓலைகாட்'' டென்று நம்பி உரைக்கநீ ஓலை காணற்
பாலையோ அவைமுன் காட்டப் பணிசெயற் பாலை'' என்ற
வேலையில் நாவ லூரர் வெகுண்டுமேல் விரைந்து சென்று
மாலயன் தொடரா தானை வலிந்துபின் தொடரலுற்றார். 43

ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்த ணாளன்
காவணத் திடையே ஓடக் கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை உற்றார் அவரலால் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார்? 44

மறைகளா யினமுன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி எழுதும் ஆள்ஓலை வாங்கி
அறைகழல் அண்ணல் ''ஆளாய் அந்தணர் செய்தல் என்ன
முறை'' எனக்கீறி யிட்டார்; முறையிட்டான் முடிவி லாதான். 45

அருமறை முறையிட் டின்னும் அறிவதற் கரியான் பற்றி
ஒருமுறை முறையோ என்ன உழைநின்றார் விலக்கி ''இந்தப்
பெருமுறை உலகில் இல்லா நெறிகொண்டு பிணங்குகின்ற
திருமறை முனிவ ரேநீர் எங்குளீர் செப்பும்'' என்றார். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றலும் நின்ற ஐயர் ''இங்குளோன் இருப்புஞ் சேய
தன்றிந்த வெண்ணெய் நல்லூரர், அதுநிற்க, அறத்தாறின்றி
வன்திறல் செய்தென் கையில் ஆவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை'' என்றான். 47

குழைமறை காதி னானைக் கோதில்ஆ ரூரர் நோக்கிப்
''பழையமன் றாடிபோலும் இவன்'' என்று பண்பின் மிக்க
விழைவுறு மனமும் பொங்க ''வெண்ணெய்நல் லூராயேல் உன்
பிழைநெறி வழக்கை ஆங்கே பேசநீ போதாய்'' என்றார், 48

வேதியன் அதனைக் கேட்டு ''வெண்ணெய்நல் லூரிலே நீ
போதினும் நன்று மற்றப் புனிதநான் மறையோர் முன்னர்
ஆதியில் மூல வோலை காட்டிநீ அடிமை யாதல்
சாதிப்பன்'' என்று முன்னே தண்டுமுன் தாங்கிச் சென்றான். 49

செல்லுமா மறையோன் தன்பின் திரிமுகக் காந்தஞ் சேர்ந்த
வல்லிரும் பணையு மாபோல் வள்ளலும் கடிது சென்றார்
எல்லையில் சுற்றத் தாரும் ''இதுஎன்னாம்'' என்று செல்ல
நல்லஅந் தணர்கள்வாழும் வெண்ணெய்நல் லூரை நண்ணி 50

வேதபா ரகரின் மிக்கார் விளங்குபேர் அவைமுன் சென்று
நாதனும் மறையோன் சொல்லும் ''நாவலூர் ஆரூரன் தான்
காதலென் அடியான் என்னக் காட்டிய ஓலை கீறி
மூதறி வீர்முன் போந்தான் இதுமற்றென் முறைப்பா'' டென்றான். 51

அந்தணர் அவையில் மிக்கார் ''மறையவர் அடிமை யாதல்
இந்தமா நிலத்தில் இல்லை என்சொன்னாய் ஐயா'' என்றார்
''வந்தவா றிசைவே அன்றோ வழக்கிவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்த(து) ''என்றனன் தனியாய் நின்றான். 52

''இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலியவாங்கிக் கிழிப்பது வெற்றி ஆமோ?
தசையெலாம் ஒடுங்க மூத்தான் வழக்கினைச் சாரச் சொன்னான்
அசைவில் ஆரூரர் எண்ணம்என்'' என்றார் அவையில் மிக்கார். 53

''அனைத்துநூல் உணர்ந்தீர்! ஆதி சைவனென் றறிவீர்! என்னைத்
தனக்குவே றடிமை என்றிவ் அந்தணன் சாதித் தானேல்
மனத்தினால் உணர்தற்கெட்டா மாயைஎன் சொல்லு கேன்யான்
எனக்கிது தெளிய வொண்ணா தென்றனன்'' எண்ணம் மிக்கான். 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வுரை அவையின் முன்பு நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற, திருமறை முனியை நோக்கி
''இவ்வுல கின்கண் நீரின் றிவரைநும் அடிமை என்ற
வெவ்வுரை எம்முன் பேற்றவேண்டும்'' என் றுரைத்து மீண்டும் 55

''ஆட்சியில் ஆவ ணத்தில் அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன ''முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்'' என்றனன் மாயை வல்லான். 56

''வல்லையேல் காட்டிங்'' கென்ன. மறையவன் ''வலிசெய்யாமல்
சொல்லநீர் வல்லீ ராகில் காட்டுவேன்'' என்றுசொல்லச்
''செல்வநான் மறையோய்! நாங்கள் தீங்குற ஒட்டோம்'' என்றார்
அல்லல்தீர்த் தாளநின்றார் ஆவணம் கொண்டு சென்றார். 57

இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண் டவையோர் ஏவ
அருள்பெறு கரணத் தானும் ஆவணம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப வாசகம் செப்பு கின்றான். 58

''அருமறை நாவல் ஆதி சைவன்ஆ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானும் என்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தென் இதற்கிவை என் எழுத்து'. 59

வாசகங் கேட்ட பின்னர் மற்றுமேல் எழுத்திட் டார்கள்
ஆசிலா எழுத்தை நோக்கி ''அவையொக்கும்'' என்ற பின்னர்
மாசிலா மறையோர் ''ஐயா! மற்றுங்கள் பேர ஞர்தம்
தேசுடை எழுத்தே ஆகில் தெளியப்பார்த் தறிமின்'' என்றார். 60

அந்தணர் கூற ''இன்னும் ஆள்ஓலை இவனே காண்பான்
தந்தைதன் தந்தைதான்வே றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தஆ வணத்தி னோடும் எழுத்துநீர் ஒப்பு நோக்கி
வந்தது மொழிமின் என்றான்'' வலியஆட் கொள்ளும் வள்ளல். 61

திரண்டமா மறையோர் தாமும் திருநாவ லூரர்கோமுன்
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால் ஓலை
அரண்தரு காப்பில் வேறோன் றழைத்துடன் ஒப்பு நோக்கி
''இரண்டும்ஒத் திருந்த தென்னே! இனிச்செயல் இல்லை''என்றார். 62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான்மறை முனிவ னார்க்கு நம்பியா ரூரர்! தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்'' என்று பண்பில்மிக்க
மேன்மையோர் விளம்ப நம்பி ''விதிமுறை இதுவே யாகில்
யான்இதற் கிசையேன் என்ன இசையுமோ'' என்று நின்றார். 63

திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
''அருமுனி! நீமுன் காட்டும் ஆவணம் அதனில் எங்கள்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய துமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டு'' கென்றார். 64

பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர் ''என்னை
ஒருவரும் அறியீ ராகில் 'போதும்' என் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்க்கு ழாமும் நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்கார், கண்டிலர் திகைத்து நின்றார். 65

எம்பிரான் கோயில் நண்ண இலங்குநூல் மார்பர் ''எங்கள்
நம்பர்தம் கோயில் புக்க தென்கொலோ'' என்று நம்பி
தம்பெரு விருப்பி னோடு தனித்தொடர்ந் தழைப்ப மாதோ(டு)
உம்பரின் விடைமேல் தோன்றி அவர்தமக் குணர்த்தல் உற்றார். 66

''முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூறப்
பின்பு நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத் தாண்டோம்'' என்றார். 67

என்றெழும் ஓசைகேளா ஈன்ற ஆன் கனைப்புக் கேட்ட
கன்றுபோல் கதறி நம்பி கரசர ணாதி அங்கம்
துன்றிய புளகம் ஆகத் தொழுதகை தலைமேல் ஆக
''மன்றுளீர்! செயலோ வந்து வலியஆட் கொண்ட'' தென்றார். 68

எண்ணிய ஓசை ஐந்தும் விசும்புடை நிறைய எங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கி ஆர்ப்ப
அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார். 69

''மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு'' கென்றார் தூமறை பாடும் வாயார். 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிய அயனும் மாலும் தெளிவுறா ஐந்தெ ழுத்தும்
பாடிய பொருளாய் உள்ளான் "பாடுவாய் நம்மை" என்ன
நாடிய மனத்த ராகி நம்பியா ரூரர் மன்றுள்
ஆடிய செய்ய தாளை அஞ்சலி கூப்பி நின்று. 71

"வேதியன் ஆகி என்னை வழக்கினால் வெல்ல வந்த
ஊதியம் அறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட
கோதிலா அமுதே! இன்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை அறிந்தேன் சொல்லிப் பாடுகேன்" என மொழிந்தார். 72

அன்பனை அருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்
"முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றார்; நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடல் உற்றார். 73

கொத்தார்மலர்க் குழலாளொரு கூறாய்அடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானைஅவ் வியன்நாவலர் பெருமான்
"பித்தாபிறை சூடி" எனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம் உ(ய்)ய எடுத்தார். 74

முறையால்வரு மதுரத்துடன் மொழிஇந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினால்
நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாம்நிகர் இல்லான். 75

சொல்லார் தமிழ்இசைபாடிய தொண்டன்தனை "இன்னும்
பல்லாறுல கினில்நம்புகழ் பா(டு)" என்றுறு பரிவில்
நல்லார்வெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புரம் எய்தான் அருள் செய்தான். 76

அயலோர்தவம் முயல்வார்பிறர் அன்றேமணம் அழியும்
செயலால்நிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை ஒழியாதுணர் வழியில்
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம் வகைபெற்றாள். 77

நாவலர்கோன் ஆரூரன் தனைவெண்ணெய் நல்லூரில்
மேவும்அருட் டுறையமர்ந்த வேதியராட் கொண்டதற்பின்
பூவலரும் தடம்பொய்கைத் திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் தனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார். 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனுறையும் திருத்துறையூர் சென்றணைந்து ''தீவினையால்
அவநெறியிற் செல்லாமே தடுத்தாண்டாய் அடியேற்குத்
தவநெறிதந் தருள்'' என்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகும் திருப்பதிகம் பாடினார். 79

புலனொன்றும் படிதவத்திற் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூர் அமர்ந்தருளும்
நிலவுந்தண் புனலும்ஒளிர் நீள்சடையோன் திருப்பாதம்
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்றொண்டர். 80

திருத்துறையூர் தனைப்பணிந்து சிவபெருமான் அமர்ந்தருளும்
பொருத்தமாம் இடம்பலவும் புக்கிறைஞ்சிப் பொற்புலியூர்
நிருத்தனார் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினால் வழிக்கொள்வான் மனங்கொண்டார். 81

மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனற்பெண்ணை யாறுகடந் தேறியபின்
நிலவுபசும் புரவிநெடுந் தேரிரவி மேல்கடலில்
செலஅணையும் பொழுதணையத் திருவதிகைப் புறத்தணைந்தார். 82

''உடையஅர(சு) உலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்கு கைத்தொண்டு விரும்புபெரும் பதியைமிதித்(து)
அடையுமதற் கஞ்சுவன்'' என்றந்நகரில் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையிற் சித்தவட மடம்புகுந்தார். 83

வரிவளர்பூஞ் சோலைசூழ் மடத்தின்கண் வன்றொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட வீரட்டானத் திறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப் புடைஎங்கும் மிடைகின்ற
பரிசனமும் துயில்கொள்ளப் பள்ளியமர்ந் தருளினார். 84

அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய் முன்னொருவர் அறியாமே
பொதுமடத்தி னுட்புகுந்து பூந்தாரான் திருமுடிமேல்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போற்பயின்றார். 85

அந்நிலைஆ ரூரன்உணர்ந் ''தருமறையோய்! உன்னடிஎன்
சென்னியில்வைத் தனை'' என்னத் ''திசையறியாவகை செய்தது
என்னுடைய மூப்புக்காண்'' என்றருள அதற்கிசைந்து
தன்முடிஅப் பால்வைத்தே துயிலமர்ந்தான் தமிழ்நாதன். 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குமவன் திருமுடிமேல் மீட்டும் அவர் தாள்நீட்டச்
செங்கயல்பாய் திடம்புடைசூழ் திருநாவ லூராளி
''இங்கென்னைப் பலகாலும் மிதித்தனைநீ யார்'' என்னக்
கங்கைசடைக் கரந்தபிரான் ''அறிந்திலையோ'' எனக்கரந்தான். 87

''செம்மாந்திங் கியானறியா தென்செய்தேன்'' எனத்
'தம்மானை அறியாத சாதியார் உளரே' என்(று) தெளிந்து
அம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவின் உரியானைக் கழல்பணிந்து பாடினார். 88

பொன்திரளும் மணித்திரளும் பொருகரிவெண் கோடுகளும்
மின்திரண்ட வெண்முத்தும் விரைமலரும் நறுங்குறடும்
வன்திரைக ளாற்கொணர்ந்து திருவதிகை வழிபடலால்
தென்திசையில் கங்கையெனும் திருக்கெடிலம் திளைத்தாடி. 89

அங்கணரை அடிபோற்றி அங்ககன்று மற்றந்தப்
பொங்குநதித் தென்கரைபோய்ப் போர்வலித்தோள் மாவலிதன்
மங்கலவேள் வியில்பண்டு வாமனனாய் மண்இரந்த
செங்கணவன் வழிபட்ட திருமாணி குழிஅணைந்தார். 90

பரம்பொருளைப் பணிந்துதாள் பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரம்தருவான் தினைநகரை வணங்கினர்வண் தமிழ்பாடி
நரம்புடையாழ் ஒலிமுழவின் நாதஒலி வேதஒலி
அரம்பையர்தம் கீதஒலி அருத்தில்லை மருங்கணைந்தார். 91

தேம லங்கலணி மாமணி மார்பிற்
செம்மல் அங்கயல்கள் செங் கமலத்தண்
பூம லங்களதிர் பாய்வன மாடே
புள்ள லம்புதிரை வெள்வளை வாவித்
தாம லங்குகள் தடம்பணை சூழும்
தண் மருங்குதொழு வார்கள் தம்மும்மை
மாம லங்களற வீடருள் தில்லை
மல்லல் அம்பதியின் எல்லை வணங்கி. 92

நாக சூதவகு ளஞ்சர ளஞ்சூழ்
நாளி கேரம்இல வங்க நரந்தம்
பூக ஞாழல்குளிர் வாழை மதூகம்
பொதுளும் வஞ்சிபல எங்கும் நெருங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேக சாலமலி சோலை களாகி
    மீது கோகிலம் மிடைந்து மிழற்றப்
போக பூமியினும் மிக்கு விளங்கும்
    பூம்பு றம்பணை கடந்து புகுந்தார். 93

வன்னி கொன்றைவழை சண்பகம் ஆரம்
    மலர்ப்ப லாசொடு செருந்திமந் தாரம்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை
    கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவல்
    துதைந்த நந்திகர வீரம் மிடைந்த
பன்ம லர்ப்புனித நந்த வனங்கள்
    பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். 94

இடம ருங்குதனி நாயகி காண
    ஏழ்பெ ரும்புவனம் உய்ய எடுத்து
நடந வின்றருள் சிலம்பொலி போற்றும்
    நான்ம றைப்பதியை நாளும் வணங்கக்
கடல்வ லங்கொள்வது போல்புடை சூழும்
    காட்சி மேவிமிகு சேட்செல ஓங்கும்
தடம ருங்குவளர் மஞ்சிவர் இஞ்சித்
    தண்கி டங்கை எதிர் கண்டு மகிழ்ந்தார். 95

மன்று ளாடுமது வின்நசை யாலே
    மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே
குன்று போலுமணி மாமதில் சூழும்
    குண்ட கழ்க்கமல வண்டலர் கைதைத்
துன்று நீறுபுனை மேனிய வாகித்
    தூய நீறுபுனை தொண்டர்கள் என்னச்
சென்று சென்றுமுரல் கின்றன கண்டு
    சிந்தை அன்பொடு திளைத்தெதிர் சென்றார். 96

பார்வி ளங்களர் நான்மறை நாதம்
    பயின்ற பண்புமிக வெண்கொடி ஆடும்
சீர்வி ளங்குமணி நாவொலி யாலும்
    திசைகள் நான்கெதிர் புறப்பட லாலும்
தார்வி ளங்குவரை மார்பின் அயன்பொன்
    சதுர் முகங்களென ஆயின தில்லை
ஊர்வி ளங்குதிரு வாயில்கள் நான்கின்
    உத்த ரத்திசை வாயில் முன் எய்தி. 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வந்தெதிர் கொண்டசீர் அடியார்
அவர்க ளோநம்பி ஆரூரர் தாமோ
முன்பி றைஞ்சினர் யாவரென் றறியா
முறைமை யால்எதிர் வணங்கி மகிழ்ந்து
பின்பு கும்பிடும் விருப்பில் நிறைந்து
பெருகு நாவல்நக ரார்பெரு மானும்
பொன்பி றங்குமணி மாளிகை நீடும்
பொருவி றந்ததிரு வீதி புகுந்தார். 98

அங்கண் மாமறை முழங்கும் மருங்கே
ஆட ரம்பையர் அரங்கு முழங்கும்
மங்குல் வானின்மிசை ஐந்தும் முழங்கும்
வாச மாலைகளில் வண்டு முழங்கும்
பொங்கும் அன்பருவி கண்பொழி தொண்டர்
போற்றி சைக்கும்ஒலி எங்கும் முழங்கும்
திங்கள் தங்குசடை கங்கை முழங்கும்
தேவ தேவர்புரி யுந்திரு வீதி. 99

போக நீடுநிதி மன்னவன் மன்னும்
புரங்கள் ஒப்பன வரம்பல ஓங்கி
மாகம் முன்பருகு கின்றன போலும்
மாளி கைக்குலம் மிடைந்த பதாகை
யோக சிந்தைமறை யோர்கள் வளர்க்கும்
ஓம தூமம்உயர் வானில் அடுப்ப
மேக பந்திகளின் மீதிடை எங்கும்
மின்னு டங்குவன என்ன விளங்கும். 100

ஆடு தோகைபுடை நாசிகள் தோறும்
அரணி தந்தசுடர் ஆகுதி தோறும்
மாடு தாமமணி வாயில்கள் தோறும்
மங்க லக்கலசம் வேதிகை தோறும்
சேடு கொண்டஒளி தேர்நிரை தோறும்
செந்நெல் அன்னமலை சாலைகள் தோறும்
நீடு தண்புனல்கள் பந்தர்கள் தோறும்
நிறைந்த தேவர்கணம் நீளிடை தோறும். 101

எண்ணில் பேர்உல கனைத்தினும் உள்ள
எல்லை யில்அழகு சொல்லிய எல்லாம்
மண்ணில் இப்பதியில் வந்தன என்ன
மங்க லம்பொலி வளர்த்தன ஆகிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணி யப்புனித அன்பர்கள் முன்பு
புகழ்ந்து பாடல்புரி பொற்பின் விளங்கும்
அண்ணல் ஆடுதிரு அம்பலம் சூழ்ந்த
அம்பொன் விதியினை நம்பி வணங்கி. 102

மால யன்சத மகன்பெருந் தேவர்
மற்றும் உள்ளவர்கள் முற்றும் நெருங்கிச்
சீல மாமுனிவர் சென்றுமுன் துன்னித்
திருப்பி ரம்பின் அடிகொண்டு திளைத்துக்
காலம் நேர்படுதல் பார்த்தயல் நிற்பக்
காதல் அன்பர்கண நாதர் புகும்பொற்
கோல நீடுதிரு வாயில் இறைஞ்சிக்
குவித்த செங்கைதலை மேற்கொடு புக்கார். 103

பெருமதில் சிறந்த செம்பொன் மாளிகையின்
பிறங்குபேர் அம்பலம் மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலில் நடுவினில் கடையில்
அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம் பலம்முன்
திருஅணுக் கன்திரு வாயில். 104

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே ஆடுகின் றாரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்தஅன் புந்தச்
செய்தவப் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்
திருக்களிற் றுப்படி மருங்கு. 105

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார். 106



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம்'' என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினல் நீடி அறிவரும் பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார். 107

தடுத்துமுன் ஆண்ட தொண்டனர் முன்பு
தனிப்பெருந் தாண்டவம் புரிய
எடுத்தசே வடியார் அருளினல் ''தரளம்
எறிபுனல் மறிதிரைப் பொன்னி
மடுத்தநீள் வண்ணப் பண்ணை ஆரூரில்
வருகநம்பால்'' என வானில்
அடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதம்
கேட்டலும் அதுவுணர்ந் தெழுந்தார். 108

ஆடுகின் றவர்பேர் அருளினல் நிகழ்ந்த
அப்பணி சென்னிமேற் கொண்டு
சூடுதங் கரங்கள் அஞ்சலி கொண்டு
தொழுந்தொறும் புறவிடைகொண்டு
மாடுபே ரொளியின் வளரும்அம்
பலத்தை வலங்கொண்டு வணங்கினர் போந்து
நீடுவான் பணிய உயர்ந்தபொன் வரைபோல்
நிலைஎழு கோபுரம் கடந்து. 109

நின்றுகோ புரத்தை நிலமுறப் பணிந்து
நெடுந்திரு வீதியை வணங்கி
மன்றலார் செல்வ மறுகினூ டேகி
மன்னிய திருப்பதி அதனில்
தென்றிசை வாயில் கடந்துமுன் போந்து
சேட்படும் திருவெல்லை இறைஞ்சிக்
கொன்றை வார்சடையான் அருளையே நினைவார்
கொள்ளிடத் திருநதி கடந்தார். 110

புறந்தருவார் போற்றிசைப்பப் புரிமுந்நூல் அணிமார்பர்
அறம்பயந்தாள் திருமுலைப்பால் அமுதுண்டு வளர்ந்தவர் தாம்
பிறந்தருளும் பெறும்பேறு பெற்றதென முற்றுலகில்
சிறந்தபுகழ்க் கழுமலமாம் திருப்பதியைச் சென்றணைந்தார். 111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளையார் திருஅவதா ரஞ்செய்த பெரும்புகலி
உள்ளுநான் மிதியேன்" என் றூரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழு மங்கையிடம்
கொள்ளுமால் விடையானும் எதிர்காட்சி கொடுத்தருள. 112

மண்டியபே ரன்பினுல் வன்ருெண்டர் நின்றிறைஞ்சித்
'தெண்டிரைவே லையில்மிதந்த திருத்தோணி புரத்தாரைக்
கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்தபடி' என்று
பண்டரும்இன் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினுர். 113

இருக்கோலம் இடும்பெருமான் எதிர்நின்றும் எழுந்தருள
வெருக்கோளுற் றதுநீங்க ஆரூர்மேற் செலவிரும்பிப்
பெருக்கோதம் சூழ்புறவப் பெரும்பதியை வணங்கிப்போய்த்
திருக்கோலக் காவணங்கிச் செந்தமிழ்மா லைகள்பாடி, 114

தேனுர்க்கும் மலர்ச்சோலைத் திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனுப்பே ரன்புமிக அடிபணிந்து தமிழ்பாடி
மானுர்க்கும் கரதலத்தார் மகிழ்ந்தஇடம் பலவணங்கிக்
கானுர்க்கும் மலர்த்தடம்சூழ் காவிரியின் கரையணைந்தார். 115

வம்புலா மலர்அலைய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப்பொன்னிப் பயில்தீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு துறைவணங்கித் தாவில்சீர்
அம்பர்மா காளத்தின் அமர்ந்தபிரான் அடிபணிந்தார். 116

மின்னுர்செஞ் சடைஅண்ணல் விரும்புதிருப் புகலூரை
முன்னுகப் பணிந்தேத்தி முதல்வன்தன் அருள்நினைந்து
பொன்னுரும் உத்தரியம் புரிமுந்நூல் அணிமார்பர்
தென்னுவ லூராளி திருவாரூர் சென்றணைந்தார். 117

தேராரும் நெடுவீதித் திருவாரூர் வாழ்வார்க்(கு)
"ஆராத காதலின்நம் ஆரூரன் நாம்அழைக்க
வாராநின் ரூன்அவனை மகிழ்ந்தெதிர்கொள்வீர்" என்று
நீராரும் சடைமுடிமேல் நிலவணிந்தார் அருள்செய்தார் 118

தம்பிரான் அருள்செய்யத் திருத்தொண்டர் அதுசாற்றி
"எம்பிரா னுர்அருள்தான் இருந்தபரி சிதுவானுல்
நம்பிரா னுர்ஆவார் அவரன்றே" எனும்நலத்தால்
உம்பர்நா டிழிந்ததென எதிர்கொள்ள உடன்எழுந்தார். 119



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகைகள் மண்டபங்கள் மருங்கு பெருங்கொடி நெருங்கத்
தாளின்நெடுந் தோரணமும் தழைக்கமுகும் குழைத் தொடையும்
நீளிலைய கதலிகளும் நிறைந்தபசும் பொன்தசும்பும்
ஒளிநெடு மணிவிளக்கும் உயர்வாயில் தொறும்நிரைத்தார். 120

சோதிமணி வேதிகைகள் தூநறுஞ்சாந் தணிநீவிக்
கோதில்பொரி பொற்சுண்ணம் குளிர்தரள மணிபரப்பித்
தாதவிழ்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகள்நுண் துகள்அடங்க விரைப்பனிநீர் மிகத்தெளித்தார். 121

மங்கலகீ தம்பாட மழைநிகர்தூ ரியம்முழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதொறும் நடம்பயில
நங்கள்பிரான் திருவாரூர் நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயில்நீள் திருவாயில் புறமுறவந் தெதிர்கொண்டார். 122

வந்தெதிர்கொண்டு வணங்குவார்முன் வன்றொண்டர்
அஞ்சலி கூப்பி வந்து
சிந்தை களிப்புற வீதியூடுசெல்வார்
திருத்தொண்டர் தம்மை நோக்கி
"எந்தை இருப்பதும் ஆரூர்அவர் எம்மையும்
ஆள்வரோ கேளீர்" என்னும்
சந்த இசைப்பதி கங்கள் பாடித்
தம்பெருமான் திருவாயில் சார்ந்தார். 123

வானுற நீள்திரு வாயில் நோக்கி
மண்ணுற ஐந்துறுப்பால் வணங்கித்
"தேனுறை கற்பக வாச மாலைத்
தேவாசிரியன் தொழு திறைஞ்சி
ஊனும் உயிரும் உருக்கும் அன்பால்
உச்சிகுவித்த செங்கைக ளோடும்
தூநறுங் கொன்றையான் மூலட்டானம் சூழ்திரு
மாளிகை வாயில் புக்கார். 124

புற்றிடங் கொண்ட புராதனனைப் பூங்கோயில்
மேய பிரானை யார்க்கும்,
பற்றிடம் ஆய பரம்பொருளைப் பார்ப்பதி
பாகனைப் பங்க யத்தாள்
அர்ச்சனை செய்ய அருள்புரிந்த அண்ணலை
மண்மிசை வீழ்ந்தி றைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோன்உடம்பால் நன்மையின்
தன்மையை மெய்ம்மை பெற்றார். 125



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு பெருக உருகிஉள்ளம் அலையஅட்
டாங்கபஞ் சாங்க மாக
முன்பு முறைமையி னுல்வணங்கி முடிவிலாக்
காதல் முதிர ஓங்கி
நன்புலன் ஆகிய ஐந்தும்ஒன் றி நாயகன்
சேவடி எய்தப் பெற்ற
இன்பவெள் ளத்திடை மூழ்கிநின்றே இன்னிசை
வண்டமிழ் மாலை பாட. 126

வாழிய மாமறைப் புற்றிடங்கொள்
மன்னவன் ஆரருளாலோர் வாக்குத்
''தோழமைஆக உனக்கு நம்மைத் தந்தனம்
நாம்முன்பு தொண்டு கொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்ட கோலம்
என்றும் புனைந்துநின் வேட்கைதீர
வாழிமண் மேல்விளை யாடுவாய்'' என்
ருரூரர் கேட்க எழுந்ததன்றே. 127

கேட்க விரும்பிவன் ருெண்டர் என்றும்
கேடிலாதானை இறைஞ்சி நின்றே
''ஆட்கொள வந்த மறையவனே! ஆரூர்
அமர்ந்த அரு மணியே!
வாட்கயல் கொண்டகண் மங்கைபங்கா
மற்றுன் பெரிய கருணையன்றே
நாட்கம லப்பதம் தந்தநின்று நாயினே
னைப்பொரு ளாக' என்ருர். 128

என்று பலமுறை யால்வணங்கி எய்திய
உள்ளக் களிப்பி ளுேடும்
வென்றி அடல்விடை போல்நடந்து வீதி
விடங்கப் பெருமான் முன்பு
சென்று தொழுது துதித்து வாழ்ந்து
திருமாளி கைவலம் செய்துபோந்தார்
அன்று முதலடி யார்களெல்லாம் தம்பிரான்
தோழர் என்றே அறைந்நார். 129

மைவளர் கண்டர் அருளினுலே வண்தமிழ்
நாவலர் தம்பெருமான்
சைவ விடங்கின் அணிபுனைந்து சாந்தமும்
மாலையும் தாரும் ஆகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வளர் கோலமெல் லாம்பொலிய மிக்க
விழுத்தவ வேந்தர் என்னத்
தெய்வ மணிப்புற்று ளாரைப் பாடித்
திளைத்து மகிழ்வொடும் செல்லா நின்றார். 130

இதற்குமுன் எல்லை இல்லாத் திருநகர் இதனுள் வந்து
முதற்பெருங் கயிலை ஆதி முதல்வர்தம் பங்கி னுட்குப்
பொதுக்கடிந் துரிமை செய்யும் பூங்குழற் சேடிமாரில்
கதிர்த்தபூண் ஏந்து கொங்கைக் கமலினி அவத ரித்தாள். 131

கதிர்மணி பிறந்த தென்ன உருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும் நாமம்
விதியுளி விளக்கத் தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதியணி புனிதன் நன்னாள் மங்கல அணியால் சாற்றி. 132

பரவினர் காப்புப் போற்றிப் பயில்பெருஞ் சுற்றம், திங்கள்
விரவிய பருவம் தோறும் விழாஅணி எடுப்ப, மிக்கோர்
"வரமலர் மங்கை இங்கு வந்தனள்" என்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத் தளர்நடைப் பருவஞ் சேர்ந்தார். 133

மானிளம் பிணையோ? தெய்வ வளரிள முகையோ? வாசத்
தேனிளம் பதமோ? வேலைத் திரைஇளம் பவள வல்லிக்
கானிளம் கொடியோ? திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
தானிளம் பருவம் கற்கும் தனிஇளந் தனுவோ என்ன. 134

நாடும்இன் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க
ஆடுமென் கழங்கும் பந்தும் அம்மனை ஊசல் என்ன
பாடும்இன் னிசையும் தங்கள் பனிமலை வல்லி பாதம்
கூடும்அன் புருகப் பாடும் கொள்கையோர் குறிப்புத் தோன்ற. 135

பிள்ளைமைப் பருவம் மீதாம் பேதைமைப் பருவம் நீங்கி
அள்ளுதற் கமைந்த பொற்பால் அநங்கன்மெய்த் தனங்கள் ஈட்டம்
கொள்ளமிக் குயர்வ போன்ற கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
உள்ளமெய்த் தன்மை முன்னை உண்மையும் தோன்ற உய்ப்பார். 136

பாங்கியர் மருங்கு சூழப் படரொளி மறுகு சூழத்
தேங்கமழ் குழலின் வாசம் திசையெலாம் சென்று சூழ
ஓங்குபூங் கோயில் உள்ளார் ஒருவரை அன்பி னேடும்
பூங்கழல் வணங்க என்றும் போதுவார் ஒருநாட் போந்தார். 137


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிசிலம் படிகள் ''பார்வென் றடிப்படுத் தனம்'' என்றார்ப்ப
மணிகிளர் காஞ்சி அல்குல் வரிஅர வுலகை வென்ற
துணிவுகொண் டார்ப்ப மஞ்சு சுரிகுழற் கழிய ''விண்ணும்
பணியும்'' என் றினவண் டார்ப்பப் பரவையார் போதும் போதில் .138

புற்றிடம் விரும்பி னாரைப் போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிச னங்கள் சூழஆ ரூடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக் கண்டார். 139

''கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன்'' என் றதிசயித்தார். 140

''ஓவியநான் முகன்எழுத ஒண்ணுமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ?
மூவுலகின் பயனாகி முன்னின்ற'' தெனநினைந்து
நாவலர்கா வலர்நின்றார்; நடுநின்றார் படைமதனார். 141

தண்தரள மணித்தோடும் தகைத்தோடும் கடைபிறழும்
கெண்டைநெடுங் கண்வியப்பக் கிளர்ஒளிப்பூண் உரவோனை
அண்டர்பிரான் திருவருளால் அயல்அறியா மனம்விரும்ப
பண்டைவிதி கடைகூட்டப் பரவையாருங் கண்டார். 142

கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியான் எதிர்நோக்கும் மெல்லியலுக்(கு)
எண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடம்அச் சம்பயிர்ப்பை வலிந்தெழலும். 143

''முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடைஅண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ?
என்னே!என் மனந்திரித்த இவன்யாரோ'' எனநினைந்தார். 144

அண்ணலவன் தன்மருங்கே அளவிறந்த காதலினால்
உண்ணிறையுங் குணநான்கும் ஒருபுடைசாய்ந்தன எனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழும்அன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப. 145


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கோடிச் சிலைவளைத்துப் படைஅநங்கன் விடுபாணம்
தாங்கோலி எம்மருங்கும் தடைசெய்ய மடவரலும்
தேங்கோதை மலர்க்குழல்மேல் சிறைவண்டு கலந்தார்ப்ப
பூங்கோயில் அமர்ந்தபிரான் பொற்கோயில் போய்ப்புகுந்தார். 146

வன்றொண்டர் அதுகண்(டு)''என் மனங்கொண்ட மயிலியலின்
இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான் யார்'' என்ன
அன்றங்கு முன்நின்றார் ''அவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கும் சேர்வரியார்'' எனச்செப்ப. 147

''பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினுள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை''. 148

என்றினைய பலநினைந் தெம்பெருமான் அருள்வகையான்
முன்தொடர்ந்து வருங்காதல் முறைமையினுல் தொடக்குண்டு
''நன்றனையாட் கொண்டவர்பால் நண்ணுவன்''என் றுள்மகிழ்ந்து
சென்றுடைய நம்பியும்போய்த் தேவர்பிரான் கோயில்புக. 149

பரவையார் வலங்கொண்டு பணிந்தேத்தி முன்னரே
புரவலனுர் கோயிலினின் றொருமருங்கு புறப்பட்டார்
விரவுபெருங் காதலினுல் மெல்லியலார் தமைவேண்டி
அரவின்ஆ ரம்புனைந்தார் அடிபணிந்தார் ஆரூரர். 150

அவ்வாறு பணிந்தேத்தி ''அணிஆரூர் மணிப்புற்றின்
மைவாழும் திருமிடற்று வானவர்பால் நின்றும்போந்(து)
எவ்வாறு சென்றாள்என் இன்னுயிராம் அன்னம்'' எனச்
செவ்வாய்வெண் நகைக்கொடியைத் தேடுவா ராயினர். 151

''பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலும்ஓர் ஆசை அளிப்பதோர்
தேசின் மன்னிஎன் சிந்தை மயக்கிய
ஈச னார்அருள் எந்நெறிச் சென்றதே''. 152

''உம்பர் நாயகர் தங்கழல் அல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கியின்(று)
எம்பி ரான்அருள் எந்நெறிச் சென்றதே''. 153



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை ஆரவும் உன்னும்என் சிந்தையை
வந்து மால்செய்து மான்என வேவிழித்(து)
எந்தை யார்அருள் எந்நெறிச் சென்றதே''. 154

என்று சாலவும் ஆற்றலர் ''என்னுயிர்
நின்ற தெங்''கென, நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின். 155

காவி நேர்வருங் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடும் உரைஇயம் பாதிருந்(து)
ஆவி நல்குவர் ஆருரை ஆண்டவர்
பூவின் மங்கையைத் தந்(து)''எனும் போழ்தினில். 156

நாட்டு நல்லிசை நாவலூரன் சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமு தத்தினைக்
காட்டு வன்கட லைக்கடைந் தென்பபோல்
பூட்டும் ஏழ்பரித் தேரோன் கடல்புக. 157

எய்து மென்பெடை யோடிடை தேர்ந்துண்டு
பொய்கை பிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது
பையுள் மாலை தமியோர் பனிப்புற. 158

பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான். 159

''மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினுல்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பார்''என்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்ன முகிழ்த்தது வெண்ணிலா. 160

அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் ஆருயிர்
வரன்கை தீண்ட மலர்குல மாதர்போல்
பரந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிரவம். 161



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றும் மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்துபோய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா. 162

வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவ லூரரும் நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினர். 163

''தந்தி ருக்கண் எரிதழ லிற்பட்டு
வெந்த காமன் வெளியே உருச்செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே!
எந்தை யார்அருள் இவ்வண்ணமோ?'' என்பார். 164

ஆர்த்தி கண்டும்என் மேல்நின் றழற்கதிர்
தூர்ப்ப தே!எனைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங்கங்கை நீள்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி!''. 165

''அடுத்து மேன்மேல் அலைத்தெழும் ஆழியே!
தடுத்து முன்எனை ஆண்டவர் தாம்உணக்
கடுத்த நஞ்சுன் தரங்கக் கரங்களால்
எடுத்து நீட்டுநீ என்னைஇன் றென்செயாய்?''. 166

''பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட!
மறம்ப யின்றதெங் கோ?தமிழ் மாருதம். 167

இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்
மன்னு காதல ளுகிய வள்ளல்பால்
தன்ன ரும்பெறல் நெஞ்சு தயங்கப்போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம். 168

கனங்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக்
    கணவனைமுன் பெறுவாள் போல
இனங்கொண்ட சேடியர்கள் புடைசூழ
    எய்துபெருங் காத லோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனங்கொண்டு தளர்மருங்குற் பரவையும்வன்
றெண்டர்பால் தனித்துச் சென்ற
மனங்கொண்டு வரும்பெரிய மயல்கொண்டு
தன்மணிமா ளிகையைச் சார்ந்தாள். 169

சீறடிமேல் நூபுரங்கள் அறிந்தனபோல்
சிறிதளவே ஒலிப்ப முன்னர்
வேறெருவர் உடன்பேசாள் மெல்லஅடி
ஒதுங்கிமா ளிகையின் மேலால்
ஏறிமர கதத்தூணத் திலங்குமணி
வேதிகையில் நலங்கொள் பொற்கால்
மாறில்மலர்ச் சேக்கைமிசை மணிநிலா
முன்றில்மருங் கிருந்தாள் வந்து. 170

அவ்வளவில் அருகிருந்த சேடிதனை
முகநோக்கி "ஆரூரர் ஆண்ட
மைவிரவு கண்டரைநாம் வணங்கப்போம்
மறுகெதிர் வந்தவரார்?" என்ன
"இவ்வுலகில் அந்தணராய் இருவர்தே
டொருவர்தாம் எதிர்நின் றுண்ட
சைவமுதல் திருத்தொண்டர்; தம்பிரான்
தோழனுர்; நம்பி" என்றுள். 171

என்றவுரை கேட்டலுமே "எம்பிரான்
தமரேயோ!" என்று முன்னம்
வன்றெண்டர் பால்வைத்த மனக்காதல்
அளவின்றி வளர்ந்து பொங்க
நின்றநிறை நாண்முதலாம் குணங்களுடன்
நீங்கஉயிர் ஒன்றும் தாங்கி
மின்தயங்கு நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து
மெல்லணைமேல் வீழ்ந்த போது; 172

ஆரநறுஞ் சேறுட்டி அரும்பனிநீர்
நறுந்திவலை அருகு வீசி
ஈரஇளந் தளிர்க்குளிரப் படுத்துமட
வார்செய்த இவையும் எல்லாம்
பேரழலின் நெய்சொரிந்தால் ஒத்தனமற்
றதன்மீது சமிதை என்ன
மாரனும்தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி
மலர்வாழி சொரிந்தான் வந்து. 173



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரமளித் துயிலாற்ருள்; வருந்தென்றல்
மருங்காற்ருள்; மங்குல் வானில்
நிலவுமிழும் தழலாற்ருள்; நிறையாற்றும்
பொறையாற்ரு நீர்மை யோடும்
கலவமயில் எனஎழுந்து கருங்குழலின்
பரமாற்ருக் கைய ளாகி
இலவஇதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்ரு
மையின்வறிதே இன்ன சொன்ஞள். 174

''கந்தங் கமழ்மென் குழலீர்! இதுஎன்? கலைவான்
மதியம் கனல்வான் எனேஇச்
சந்தின் தழலைப் பனிநீர் அளவித் தடவுங்
கொடியீர்! தவிரீர்! தவிரீர்!
வந்திங் குலவும் நிலவும் விரையார் மலயா
னிலமும் எரியாய் வருமால்
அந்தண் புனலும் அரவும் விரவும் சடையான்
அருள்பெற் றுடையார் அருளார்''. 175

''புலரும் படியன் றிரவென் னளவும் பொறையும்
நிறையும் இறையும் தரியா
உலரும் தனமும் மனமும்; வினையேன் ஒருவேன்
அளவோ! பெருவாழ் வுரையீர்!
பலரும் புரியும் துயர்தான் இதுவோ? படைமன்
மதனுர் புடைநின் றகலார்!
அலரும் நிலவும் மலரும் முடியார் அருள்பெற்
றுடையார் அவரோ அறியார்''. 176

''தேரும் கொடியும் மிடையும் மறுகில் திருவா
ரூரீர்!'' நீரே அல்லால்
ஆரென் துயரம் அறிவார்? அடிகேள் அடியேன்
அயரும் படியோ இதுதான்?
நீரும் பிறையும் பொறிவாள் அரவின் நிறையும்
நிரைவெண் தலையின் புடையே
ஊருஞ் சடையீர்! விடைமேல் வருவீர்! உமதன்
பிலர்போல் யானே உறுவேன்?'' 177

என்றின் னனவே பலவும் புகலும் இருளார்
அளகச் சுருளோ திமையும்
வன்ருெண் டரையும் படிமேல் வரமுன் பருள்வான்
அருளும் வகையார் நினைவார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றும் பர்களும் பணியும் செல்வத் திருவா
ரூர்வாழ் பெருமான் அடிகள்
''அன்றங் கவர்மன் றலைநீர் செயும்''என்
றடியார் அறியும் படியால் அருளி. 178

மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ ''மங்கை
பரவை தன்னைத் தந்தோம்;
இன்னவ் வகைநம் அடியார் அறியும் படியே
உரைசெய் தனம்''என் றருளிப்
பொன்னின் புரிபுன் சடையன் விடையன் பெருமா
கரியின் உரிவை புனைவான்
அன்னந் நடையாள் பரவைக்(கு) ''அணிய தாரு
ரன்பால் மணம்'' என்றருள. 179

காமத் துயரில் கவல்வார் நெஞ்சிற் கரையில்
இருளும் கங்குல் கழிபோம்
யாமத் திருளும் புலரக் கதிரோன் எழுகா
லையில்வந் தடியார் கூடிச்
சேமத் துணையாம் அவர்பேர் அருளைத் தொழுதே
திருநா வலர்கோன் மகிழத்
தாமக் குழலாள் பரவை வதுவை தகுநீர்
மையினல் நிகழச் செய்தார். 180

தென்னுவ லூரர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னுருங் கொடிமருங்குல் பரவையெனும் மெல்லியல்தன்
பொன்னுரும் முலைஓங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினர். 181

தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையாள் உடன்கூடி விளையாடிச் செல்கின்றார். 182

மாதுடன் கூட வைகி மாளிகை மருங்கு சோலை
போதலர் வாவி மாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச் செழுந்தவி சிழிந்து தங்கள்
நாதர்பூங் கோயில் நண்ணிக் கும்பிடும் விருப்பால் நம்பி. 183

அந்தரத் தமரர் போற்றும் அணிகிளர் ஆடை சாத்திச்
சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியஞ் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி
இந்திரத் திருவின் மேலாம் எழில்மிக விளங்கித் தோன்ற. 184


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையினில் புனைபொற் கோலும் காதினில் இலங்கு தோடும்
மெய்யினில் துவளு நூலும் நெற்றியில் விளங்கு நீறும்
''ஐயனுக் கழகிதாம்'' என் றுயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலந் தழைப்பவீ தியினைச் சார்ந்தார். 185

''நாவலூர் வந்த சைவ நற்றவக் களிறே'' என்றும்
''மேவலர் புரங்கள் செற்ற விடையவர்க் கன்ப!'' என்றும்
''தாவில்சீர்ப் பெருமை ஆரூர் மறையவர் தலைவ!'' என்றும்
மேவினர் இரண்டு பாலும் வேறுவே றுகப் போற்ற. 186

கைக்கடா குரங்கு கோழி சிவல்கவு தாரி பற்றி
பக்கமுன் போது வார்கள் பயில்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரையடைப் பையோர் சூழ
மைக்கருங் கண்ணி ஞர்கள் மறுகநீள் மறுகில் வந்தார். 187

பொலங்கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்பு போத
இலங்கொளி வலயப் பொற்றோர் இடையிடை மிடைந்து தொங்கல்
நலங்கிளர் நீழல் சூழ நான்மறை முனிவ ரோடும்
அலங்கலந் தோளினன் வந்தணைந்தனன் அண்ணல் கோயில். 188

கண்ணுதல் கோயில் தேவா சிரியனும் காவ ணத்து
விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்கசீர் அடியார் கூடி
எண்ணிலார் இருந்த போதில் ''இவர்க்கியான் அடியேனாகப்
பண்ணுநாள் எந்நாள்'' என்று பரமர் தாள்பரவிச் சென்றார். 189

''அடியவர்க் கடியனவேன்'' என்னும்அ தரவு கூரக்
கொடிநெடும் கொற்றவாயில் பணிந்துகை குவித்துப் புக்கார்
கடிகொள்பூங் கொன்றை வேய்ந்தார் அவர்க்கெதிர் காணக்காட்டும்
படியெதிர் தோன்றி நிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு. 190

மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்ந்(து)
அன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
என்த ரத்தும் அளித்தெதிர் நின்றன. 191

ஞாலம் உய்ய நடமன்றுள் ஆடின;
காலன் ஆருயிர் மாளக் கறுத்தன,
மாலை தாழ்குழல் மாமலை யாள்செங்கை
சீல மாக வருடச் சிவந்தன. 192

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன;
வேதி யாதவர் தம்மைமேவே திப்பன;
சோதி யாய்எழுஞ் சோதியுட் சோதிய;
ஆதி மாலயன் காணு அளவின. 193

வேத ஆரணம் மேற்கொண் டிருந்தன;
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன;
ஏத மானவை தீர்க்க இசைந்தன;
பூத நாத! நின் புண்டரீ கப்பதம். 194

இன்னவா றேத்து நம்பிக் கேறுசே வகனூர் தாமும்
அந்நிலை அவர்தாம் வேண்டும் அதனையே அருள வேண்டி
மன்னுசீர் அடியார் தங்கள் வழித்தொண்டை உணர நல்கிப்
பின்னையும் அவர்கள் தங்கள் பெருமையை அருளிச் செய்வார். 195

"பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்;
ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்;
அன்பினால் இன்பம் ஆர்வார்;
இருமையும் கடந்து நின்றார்;
இவரைநீ அடைவாய்" என்று. 196

நாதனார் அருளிச் செய்ய நம்பியா ரூரர் "நானிங்(கு)
ஏதந்தீர் நெறியைப் பெற்றேன்" என்றெதிர் வணங்கிப் போற்ற
"நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்துநீ நிறைசொல் மாலை
கோதிலா வாய்மை யாலே பா"டென அண்ணல் கூற. 197

தன்னையா ளுடைய நாதன் தானருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப் பாடி நாடர்
"இன்னவா றின்ன பண்பென் றேத்துகேன்? அதற்கி யானார்?
பன்னுபா மாலைபாடும் பரிசெனக் கருள்செய்" என்ன. 198

கொல்லைமால் வரைபயந்த தூயாள்தன் திருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்(று)
எல்லையில்வண் புகழாரை எடுத்திசைப்பா மொழி"என்றார். 199

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுசீர் வயல்ஆரூர் மன்னவரை வன்றொண்டர்
சென்னியுற அடிவணங்கித் திருவருள்மேற் கொள்பொழுதில்
முன்னமால் அயன்அறியா முதல்வர்தாம் எழுந்தருள
அந்நிலைகண் டடியவர்பால் சார்வதனுக் கணைகின்றார். 200

தூரத்தே திருக்கூட்டம் பலமுறையால் தொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றழியா
விரத்தார் எல்லார்க்கும் தனித்தனிவே(று) அடியேன் (என்று)
ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள்செய்வார். 201

தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தானருளும் உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்றொண்டர் பாடிஅவர் எதிர்பணிந்தார். 202

உம்பர்நா யகரடியார் பேருவகை தாமெய்த
நம்பியா ரூரர்திருக் கூட்டத்தின் நடுவணைந்தார்;
தம்பிரான் தோழரவர் தாம்மொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்தல் உறுகின்றேன்.

**தடுத்தாட்கொண்ட புராணம் முற்றிற்று.**

**திருமலைச் சருக்கம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் காட்டும் ஆன்மீக உலகு.

கனகசபாபதி நாகேஸ்வரன் M. A.
துணை விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

தமிழிலக்கிய வரலாற்றிலே சோழப்பெருமன்னர் காலத்தைக் ''காவிய காலம்'' என்று கூறுவார்கள். அக்காலத்துப் பெருங் காப்பியங்கள் யாவும் சமயப் பிரசாரப் பண்புகளுடன் காணப்படு கின்றன. காப்பியப் புலவர்கள் உலகியல் வீரர்களைத் தன்னிகரில் லாத் தலைமைப் பண்புகளுடன் தோற்றுவிப்பதுவும் மரபாக விருந் தது. அந்தமரபின் பின்னணியின் தொடர்ச்சியாகவே பெரியபுரா ணமும் ஞானவீரர்களைத் தோற்றுவித்த பக்திக்காவியமாக விளங்கு கின்றது.

''ஈர அன்பினர் யாதுங் குறைவிலர் வீரம் என்னால் விளம்புந் தகையதோ'' என்று சேக்கிழாரே வியந்து - விதந்து கூறத்தக்களவு மாட்சிமைப்பட்டவர்கள் அவ்வடியார்கள்; தொண்டர் குலமாகவும் தொழு குலமாகவும் விளங்கிய அடியார்களது சரிதங்கள் உணரப் பட்டும் உணர்த்தப்பட்டும் இருந்த சூழலின் பின்னணியில் சேக் கிழார் காலத்தின் ஆன்மீகப் புரட்சியினைக் காணமுடிகிறது.

அடியார்களது அகவாழ்விலும் புறவாழ்விலும் அமைந்த பல் வேறு திருப்பங்களையும் பிறப்பு, வாழ்வு, சூழல் ஆகிய அமிசங்களை யும் சேக்கிழார் ,பழஞ் சரிதத் தொடர்புகளுடன் ஆழமாகவும் நுண்மான் நுழைபுலத்தோடும் கூறுவதானது, அவர் அக்காலச் சமுதாய வாழ்க்கையிற் பெரிதும் ஈர்க்கப்பட்டும் ஈடுபாடு கொண் டுமிருந்தாரென்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

வெறுமனே அடியார்களது வரலாறு பேசும் நூலாகப் பெரிய புராணத்தை அமைக்காது தமது தலையாய நோக்கமான ''பக்திப் பாவிகத்தை'' நூல் முழுவதும் இழையோட விட்டுள்ளதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணத்துட் தடுத்தாட்கொண்ட புராணம் தனிக் காவியமாக மிளிருகிறது. காப்பிய நாயகனான சுந்தரரது வாழ்க்கை வரலாறு குட்டிக் காப்பியமாக அணியலங்கார நயத்துடன் பாடப் பட்டுள்ளது. மன்றுளாடும் இறைவனின் திருவருள் வழிநடத்தலின் படி நிகழ்கின்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பாகவே 'தடுத்தாட்கொண்ட புராணத்தினை' அமைத்துவிடுகிறார். மக்கள் வாழ்க்கை, பௌராணி கக்கதை மரபுகள், இயற்கைவளம், வாழ்வியலொழுக்கம், அடியார் பெருமை, ஆகமநெறி, வழிபாட்டுநெறி, அசரீரி, சமயப்பிரசாரம் ஆகியவற்றை உள்ளீடாகக்கொண்டு சமய உணர்விலும், அடியார் பெருமையிலும் சங்கமிக்கும் தெய்விகக் கவியாகவே சேக்கிழார் விளக்குகிறார்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் அடிநாதமான வித்தாயிருப் பது ''இறைவனே சுந்தரர்முன் தோன்றியும், தோன்றாத்துணையாக வும் நின்று அவரது வாழ்வினை நெறிப்படுத்தித் திருவருளின் பேர ருட்சிறப்பினைக் காட்டும் பண்பே'' என்று கூறிவிடலாம். தோழ மைப் பண்புடனும் – தோழமையுறவுடனும் கிழப்பிராமண வேடந் தாங்கிநின்று, சரீரியாகவும் அசரீரியாகவும் தோன்றியும் தோன்றா மலும் நின்று, வாழ்வின் கட்டங்களை வகையாகப் பிரித்து 'அடி மைகொள்ளும்', 'வலிந்து ஆட்கொள்ளும்' கதைப் போக்கிலே சேக்கிழார் வெகு சாதுரியமாகவும், பக்திச் சுவைநனி சொட்டும் படியும் பாடிச் சென்றுள்ளார்.

தடுத்தாட்கொண்டபுராணம் முழுவதையும் எடுத்துக் கொண் டால் அதன் நிகழ்ச்சிக் கட்டங்களை நான்கு வகையாகப் பிரிக்க லாம் போலத் தோன்றுகின்றது.

1) இறைவன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட காட்சி.
2) தில்லைத் தலவழிபாடும்; ஏனைய தல யாத்திரைகளும்.
3) பரவையாரைக் காதலித்தமை.
4) திருத்தொண்டத்தொகை பாடியமை.
(அடியார் பெருமை கூறல்)

தடுத்தாட் கொண்ட நிகழ்ச்சி 67 செய்யுட்களில் கூறப்பட் டுள்ளது. சுந்தரரது பிறப்பு, வளர்ப்பு, திருமணப்பருவம், திரு மணக்கோலம் என்பவற்றைக் கூறித் திருமணம் நிகழ்வதற்கு ஏற் பாடாகிறது. நன்னகரான திருநாவலூர் விழவு கொள்ளவும், வெண் சங்கம் எங்கும் முழங்கி நிற்கவும், திருமண நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் கிழப்பிராமணர் ஒருவர் 'சுந்தரரைத் தடுத்தடிமை கொள்வான் வேண்டி' 'வேணுத் தண்டொருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு' மணப்பந்தரின் முன் வந்து தோன்றி ''என் அடியான் இந்நாவல்நகர் ஊரான். இது நான் மொழிவதென்று'' (செய். 37) கூறுகின்றார். இதைக்கேட்ட சபையோர் ''ஆசில் அந்தணர் வேறோர் அந்தணர்க் கடிமையாதல் இந்தமா நிலத்தில் இல்லை'' என்று மறுத்து வழக்காடச் செல்கின்றார்கள். சேக்கிழார் (கவிக் கூற்றாக) புனித நான்மறையோரின் முன்பு ''சுந்தரர் வழிவழி அடிமை பூண்டவன்'' என்பதை நிரூபித்துக் காட்டும் என்று கிழப் பிராமணரை வேண்ட அவர் நிரூபித்து விடுகின்றார். இந்த இடத்தில் சேக்கிழாரது சட்டநுணுக்க அறிவின் வெளிப்பாடு முதன்மந்திரிப் பதவியின் அநுபவம் என்பன தெளிவாகப் புலப்பட்டு நிற்கின்றன.

'ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்' (செய். 53)

என்று குறிப்பிடுகின்றார்.

இங்கு ஆட்சிக்கு முதலிடம் தருதல் மிகவும் கவனித்தற்குரியது. எழுத்துக் சட்டத்தையும் மேலாடவல்லது - சக்தி பெற்றது 'ஆட்சி' என்பது. அதனை அன்றே போற்றியிருந்தனரென்பது, இப் பாடலில் ''ஆட்சியை'' முதலில் கூறுவதால் உறுதிப்படுகிறது. ஆட்சி விளங்காதபோது 'ஆவணம்' (Documentary Evidence) பயன்படுகின்றது. மூன்றாவது ''அயலவர் தம் காட்சி'' என்பது இந்நிலையில் அந்தணர் தம்மிடமுள்ள மூலவோலையைக் காட்டுகின்றார். நீதிமன்றத்தினர் சுந்தரரது பாட்டனாரது எழுத்தென்பதை 'அரண்தருக் காப்பிலிருந்த' (Museum) சுவடியுடன் ஒப்புநோக்கியபின் ''விதிமுறை இதுவேயாகில் யான் இதற்கிசையேன் என்னல் இசையுமோ'' (செய். 63) என்று கூறுவதன் மூலம் 'சுந்தரர் அடிமை' என்பதை நிரூபித்து விடுகின்றனர். துன்புறு வாழ்க்கையிலிருந்து - லௌகிக வாழ்விலிருந்து விடுவித்த வேதவடிவு பெற்ற வேதியரது காரியம் நிறைவேறிவிட்டது. இதன்மூலம் பக்திச்சுவையைக் காட்டிவிடுகின்றார் தெய்வமாக்கவி சேக்கிழார்.

சித்தவட மடத்தில் திருவடி சென்னியிற் பதித்தமையை இடையிலே புகுத்திய திருவிளையாடலைக் கூறியும் பல்வேறு திருத்தலங்களை வழிபட்டமை பற்றியும் கூறும் சேக்கிழார் 91ஆவது பாடலில் தில்லைப்பதியை அடைந்து வழிபடும் ஆகமமரபு முறையை விரிவாகக்கூற முற்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாழ்க்கையில் குறிக்கோள் ஒன்று இல்லாமல்
இன்ப வேட்டை ஒன்றையே கருத்தாகக் கொண்டு
தலைகீழாகப் போய்க்கொண்டிருந்த தமிழ்மக்களைக்
கைதூக்கி நன்னெறி காணச்செல்லும் பெருநோக்கத்துடனும்,
சைவசமய ஆசார நெறிகளையும், வழிபாட்டு முறைகளையும்
அழுத்திக் கூறுவான் வேண்டியும், பக்திநெறியறிவித்துப்
பழவினைகளைப் போக்கும் தன்மையுடனும் இப்பகுதியை
அமைத்து விடுகிறார். இப்பகுதியின் மூலம் சேக்கிழார்
கல்வியறிவு; புலமை; வாக்குவன்மை; கலைத்திறன்;
பக்திபிடுபாடு முதலிய அனைத்தையும் ஒருசேரப்
பெற்றவர் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.''
தில்லையின் தெய்வீகச் சிறப்பைக் கூறும்போது,

''நரம்புடை யாழ்ஒலி; முழவின் நாதவொலி; வேதஒலி
அரம்பையர்தம் கீதவொலி அருத்தில்லை'' (செய். 91)

என்று தெய்வீகப் பின்னணியில் கூறுவது அவர் கொண்டுள்ள கலையம்சம் சார்ந்த சமயப்பிரச்சாரத்தின் ஆழத்தினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

கோவிற் சிறப்பினை ஆகம வழிபாட்டோடு படம்பிடித்துக் காட்டும் சேக்கிழார் வழிபாட்டு நெறிமரபைப் - பல்வேறு மதங்களினதும் பிரசாரத்தின் மத்தியிலும் வலியுறுத்திக் கூறவேண்டிய தேவையிருந்தது. அடியார்களது ஆன்மநேய ஒருமைப்பாட்டையும், மெய்பாடுகளின் ஏற்ற விளக்கத்தினையும், தூக்கிய திருவடி தரிசனத்தையும், சுந்தரரது ஆன்மீக ஞானத்தையும், பக்திவைராக்கியத்தையும்,

''ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையிற் றனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.'' (செய். 106)

என்றும்,

''.........கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் காட்டுகின்றார். இப்பாடல்கள் சேக்கிழாரது ஆன்மீக அநுபவத்தையும், சுந்தரரிடமிருந்து அதன் சாயலையும் மனத்துட் கொண்டு பிழிந்தெடுத்த கவித்துவ ஆற்றலுக்குரிய முத்திரைப் பாடல்களாக அமைந்துள்ளன.

> ''வழிபாட்டுநெறி சீரழிவதை விரும்பாத
> சேக்கிழார் மீண்டும் அம் முறைகளைப்
> புனரமைப்புச் செய்து ஞாபகமூட்டுகின்றார்.
> கலையழிவுக் கொள்கைக்கு மாறாகக் கலைகளைப் பேணுங்
> கொள்கையுங் கொண்டுள்ளார்.''

என்று கூறலாம். தவிர்க்க முடியாதபடி, அநுபவவுணர்வும், தேவையும் சேக்கிழாரை இத்தகு நிலைக்கு ஆட்படுத்தி விட்டிருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

சுந்தரர், பெரும்புகலி, தோணிபுரம், திருக்கோலக்கா, திருப்புன்கூர், காவிரிக்கரை, மயிலாடுதுறை, திருப்புகலூர், திருவாரூர் போன்ற தலங்களுக்குச் சென்ற காட்சிகளைக் கூறுவதன் மூலம் சேக்கிழாரது திருத்தலங்கள் பற்றிக் கொண்டுள்ள ஒழுங்கு முறையான, நிதான அறிவினைக் கண்டுகொள்ள முடிகிறது. தாம் நூலறிவினாலும், நுண்ணறிவினாலும், கண்டுணர்ந்த - கேட்டுணர்ந்த - கற்றுணர்ந்த பன்முகப்பட்ட விடயங்களையும் தொகுத்துக் கூறும் போக்கு அவரது நேர்மையான உள்ளத்தினைப் புலப்படுத்துகிறது.

திருவாரூரில் பரவையாரது அவதாரமும் சுந்தரர் அவரைக் காதல் கொள்ள வேண்டும் என்ற - விதித்தநியதியும் அசரீரியினால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ''வேட்கை தீர வாழி மண்மேல் விளையாடுவாய்'' (செய். 127) என்று தொடங்கி ''மின்னிடையாள் உடன் கூடி விளையாடிச் செல்கின்றார்'' (செய். 182) என்பதுவரை நிகழ்ந்த காதற்காட்சியை ஏறக்குறைய 63 பாடல்களில் பாடிச் சென்றுள்ளார். ''கதிர்த்தபூண் ஏந்துகொங்கைக் கமலினி''யின் அவதாரம் கூறிப் பின் அவளது அழகினை அழகியல் உணர்வு சேர்ந்த பத்தியுடன் வர்ணிக்கின்றார். சுந்தரர் கமலினியின் அழகு பற்றிக் கூறுமிடத்து,

> ''மானிளம் பிணையோ தெய்வ வளரிள முகையோ வாசத்
> தேனிளம் பதமோ வேலைத் திரை இளம் பவளவல்லிக்
> கானிளம் கொடியோ திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
> தானிளம் பருவம் கற்கும் தனி இளந் தனுவோ'' (செய்.134)

என்று ஏக்கங் கொள்கின்றார்.. 'நற்பெரும் பான்மை கூட்ட' (செய். 139) என்று விதியின் விளைவாகவே பரவையாரைச் சுந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரர் கண்டார் என்று பேசும் சேக்கிழார், காட்சி ஐயம் தெளிவு என்ற தமிழிலக்கிய அகத்திணை மரபினின்றும் பிறழாமல் இவள் யாரோ? என வியந்து உயர்வு நவிற்சியாகக் கூறுவதன் மூலமும் மானுடப் பிறவியெடுத்த 'தெய்விகப் படைப்பு'த் தான் இவள் என நிறுவுகிறார்.

''கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்றதிசயித்தார்''.

(செய். 140)

என்று 'பரவையைச்' சிவன் அருள் என்றுதான் நினைக்கின்றார் சுந்தரர். பரவையார் சுந்தரது சுந்தரவழகைப் பற்றிப் பின்வருமாறு எண்ணுவதாகச் சேக்கிழார் பாடும் திறன் வியந்து பாராட்டத் தக்கது. பக்தி கொப்பளிக்கும் பாடலிது.

''முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னே! என்மனந்திரித்த இவன்யாரோ எனநினைந்தார்.

(செய். 144)

நாடகப் பண்பில் காட்சிகளையும், பொதுமனிதப் பாத்திரங்களையும் கூறும் சேக்கிழார் இப்பகுதியில் வைரம் பாய்ந்த வைதிக நெறியினை மனங்கொண்டு அதற்குரிய பண்புகளுடன் பாடல்களை யாத்துள்ளார். சுருக்கமாகவும் கவியாற்றலுடனும், நிகழ்ச்சி விவரணங்களைச் சொல்லிச் செல்லும் செய்யுட்களாகவும், நறுக்குத் தெறித்தாற் போற் சொற்களை வெகு லாவகமாகக் கையாளுவதோடு, சம்பவ இடைவெளியையோ கதைத்தொய்வையோ காண முடியாதுள்ளது. வாழ்வின் பகுதிகளைக் கட்டம் கட்டமாகக் கூற முனைந்த சேக்கிழார் இங்கு விரைவுடனே 'பக்திப் பாவிகத்தை'யே (பாவிகம் என்பது காவியப்பண்பே) நோக்கி நகர்த்திச் செல்லும் பண்பினைக் காண முடிகிறது. எனினும் ஒருங்கிணைந்த கட்டமைப்புத் தன்மையுடன் காவியம் நடைபெறுவதைக் காணலாம்.

நிகழ்ச்சிகளின் போக்கிற்கும், முக்கியங்களுக்கும், வேறுபாட்டிற்கும் ஏற்பச் செய்யுள் நடையிலும் ஓசை மாற்றங்களுடனும் சந்த வேறுபாடுகளுடனும் பாடுகின்றார். பயில்வோருக்கு 'யாப்பு மாற்றம்' 'கதைப்போக்கின் மாற்றத்தைப் புலப்படுத்துவதாயமை வதை நோக்குதல் வேண்டும். அறுசீர் ஆசிரியவிருத்தம், கலிவிருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் போன்ற பாவினங்களை மாறிமாறிக் கையாண்டுள்ளார். சேக்கிழார் தமது சாதுரியத்தாலும் - சாமர்த்தியத்தினாலும் சமத்காரத்தினாலும் இறைவனையும் நம்பியாரூரரையும் அழகுற அமைத்துக் காட்டியுள்ளார்.

உவமை கூறியுள்ள இடங்களிலெல்லாம் பத்திரசம் ததும்பும் வாழ்வை நன்னெறிக்கண் செலுத்தும் உவமைகளாகவே பாடிச் சென்றுள்ளார்.

''......அரன் அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சுமென்ன இருண்டது நீண்டவான்'' (செய். 159)

''அண்டமெல்லாம் பரந்தண்ணல் வெண்
நீற்றின் பேரொளிபோன்றது நீள்நிலா''. (செய். 161)

''நீர்த்தரங்க நெடுங்கங்கை நீள்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றில்லை தண்மதி''. (செய். 165)

என்றும் வரும் உவமைகள் கண்டின்புறத்தக்கன. இப் பகுதிகளில் தற்குறிப்பேற்ற அணியையும் உயர்வுநவிற்சியணியையும் கையாண்டுள்ளார்.

பல இடங்களிலும் அறிந்தோ அறியாமலோ கடவுள் நெறியைப் பிணைத்துச் செல்கின்ற சேக்கிழார் காதல் வாழ்வில் திளைத்த அடியவர் வாழ்வைக் கூறும்போது இவர் ஓர் அகப்பொருட் கவிஞராகவே மாறிவிடுகின்றார். சுந்தரனார் பரவையாருடன் திருவாரூரிலும், சங்கிலியாருடன் ஒற்றியூரிலும் வாழ்ந்ததை விளக்கவந்த சேக்கிழார் பிறிதிரு இடங்களிலே ''பண்டு நிகழ் பான்மையினால்'' (ஏயர் கோன் 267) என்னும் பாடலிலும், ''மருவிய இன்ப வெள்ளத் தழுந்திய...'' (ஏயர்கோன் 381) என்னும் பாடலிலும் குறித்துள்ளார்.

சுந்தரரைக் காதலினாற் பிரிந்த பரவையினுடைய மனம் நிலைகொள்ளாத விரகதாப நிலையைச் சேக்கிழார் பெருமான் 173 ஆம் செய்யுளில் காட்டுகின்றார். அப்பாடல் வருமாறு:-

''ஆரநறுஞ் சேறாட்டி அரும்பனிநீர் நறுந்திவலை அருகுவீசி
ஈரஇளந்தளிர் குளிரிபடுத் துமடவார் செய்த இவையும் எல்லாம்
பேரழலின் நெய்சொரிந்தால் ஒத்தனமற்றதன் மீதுசமிதை என்ன
மாரனும்தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி மலர்வாளி சொரிந்தான்
வந்து
(செய். 173)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல்விவகாரத்தில் ஆடவர்கள்போல் மாதர்கள்தம் மனக் கருத்தை வெளியிடுவதில்லை. காமநோய் மேலீட்டினுல் தோழியர் உடம்பிற் பூசிய நல்வாசனை பொருந்திய சந்தனம், பன்னீர்த்திவலை ஈரத்தோடு கூடிய நீர்க்குளிரி, "இவையெல்லாம் பேரழலின் நெய் சொரிந்தால் ஒத்தன" என்றளவுக்கு வெம்மையைத் தந்தனவென்று கூறுகிருர். இவ்வனுபவங்கள் காதல் கைகூடாதார் மாட்டுக் காதலர்களடைகின்ற பெருந்துன்ப அனுபவம். பரவையாரோ,

"மலரமளித் துயிலாற்ருள் வருந்தென்றல் மருங்காற்ருள் மங்குல் வானில்
நிலவுமிழும் தழலாற்ருள் நிறைபாற்றும் பொறைபாற்ருள்..."

(செய். 174)

என்றவாறு விரகத்துயரம் மேலிட வருந்துவது காட்டப்பட்டுள்ளது. பரவையின் யதார்த்த நிலையை விளக்குமிப்பாடல் அந்தத்திணைச் செய்யுட் பிழிவாகவே விளங்குகிறது. இதுபற்றிப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் பின்வருமாறு விமர்சித்துள்ளார்.

"பரவையார் வருந்துவது காதல் கொண்டு வருந்தும் ஏனைய பெண்களைப் போலவே அமைந்துள்ளது. ஆனுல் மற்றைப் பெண்கள் நிலவையும் தென்றலையும் சந்தனத்தையும் பழிப்பதுடன் நின்றுவிடுவர். ஆனுல் இறைவன்பால் நீங்கா அன்புபூண்ட பரவையாரோ ஒருபடி மேலே செல்லுகின்ருர். ஆற்ருேட்டம் போல் நேரே சென்றுகொண்டிருந்த தம்முடைய வாழ்வில் இக்காதல் குறுக்கிட்டது இறைவனுடைய திருவருள் என்று ஒருவர் நினைப்பாரேயானுல் அக்காதல் முற்றுப்பெற வேண்டுமென்ருலும் அத்திருவருளைத் தானேவேண்ட வேண்டும், பரவையும் இறைவனிடம் துயரை வெளியிட்டு வேண்டுகின்ருர்". (தேசிய இலக்கியம் பக். 188)

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் தமது சேக்கிழார் தந்த செல்வம், என்ற கட்டுரையில்,

"நிலாமுற்றத்துத் துயிலாற்ருது பரவையார் வாடிய வாட்டத்தினைப் பயிலின், இது ஓர் அகப்பொருள் நூல் என்றே தோன்றும். இத்துணைக் காதல் வாழ்வைப் புகுத்தும் நிலையிலும் தாம் காட்ட வந்த வாழ்வைக் கடவுள் வாழ்வோடு பிணைக்கும் பெருநெறி காணத்தக்கது" எனக் குறிப்பிட்டார்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் நான்காவது கட்டம் – அம்சம் – அடியார்களை அடியாருகக் கொண்டு சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடிய செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீரத்தார் எல்லார்க்குந் தனித்தனி வேறடியேன்".

(செய். 201)

என்ற ஆர்வத்தால் சுந்தரர் அன்புநெறியில் நிற்க முயன்றார்.

அடியார் பெருமைபற்றிக் கூறவந்த சேக்கிழார் பக்தியின் பண்பினையும் பயனையும் கூறுமுகத்தால்,

"பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் தம்மைப் பெற்றார்
ஒருமையில் உலகை வெல்வார்
ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரைநீ அடைவாய்"

(செய். 196)

என்று பாடுவார். இப்பாடலே பக்திப் பாவிகத்தின் நிறைவாகவும் உச்சமாகவும் அமைந்துள்ளது. "ஏதந்தீர் நெறியைப்பெற்ற சுந்தரர்" அடியவர்களை "இன்னவாறின்ன பண்பென்றேத்துகேன்" என்று தலைதடுமாறி நின்றபோது 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' (செய். 199) என்று 'எடுத்திசைப்பாமொழி' என்று அசரீரி கேட்டது. அவரும் ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப் பதிகத்தை அருளிச் செய்தார். இங்கு வாழ்க்கையின் குறிக்கோள் பற்றியும் உலகுய்யத் திருத்தொண்டத்தொகை பாடினார் என்றும் விமர்சகர்கள் கூறுவர்.

ஒட்டு மொத்தமாக நோக்கும்போது தடுத்தாட்கொண்டபுராணத்தில் அடியார்பற்றிய தொடர்பினால் மட்டும் எதையும் கூறவில்லை. பன்முகப்பட்ட போக்கிலே சமய உணர்விலும், இறைவனது மகோன்னதமான பெருமையிலும் கலந்துறவாடும் சேக்கிழாரையே காணுகின்றோம். 'சிவபுண்ணியம்' பெருவாழ்வைத்தரும் என்பது சேக்கிழாரது கொள்கையாக இருந்தது. அதை ஈடேற்றுவதற்குத் தடுத்தாட்கொண்ட புராணத்தைப் பாடினார் எனலாம். சேக்கிழார் காட்டும் ஞான உலகம் ஆன்மீக உலகு அவரது மனவிரிவைக் காட்டுகின்றது.

---

நன்றி, 'இந்துநெறி', இந்துமன்ற வெளியீடு,
இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம். 1978.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம், சுந்தரர், சேக்கிழார் பற்றி.........

''பெரியபுராணத்தைத் தேசியஇலக்கியம் (National Literature) என்று குறிக்கலாம். இத்தகைய ஒரு தேசிய இலக்கியம் பாடுவதற்குத் தமக்கு வாய்ப்பு அளித்தவர் சுந்தரர் என்பதைச் சேக்கிழார் மறவாமல் அவருக்குத் தனிப்பட்ட முறையில் சருக்கந் தோறும் நன்றியுடன் வணக்கம் செலுத்துகிறார்''.

(பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்)

''சேக்கிழார் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரின் திருத்தொண்டத் தொகையையும் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் பின்பற்றியே, தன் நூலை யாத்துள்ளார். நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை விரித்துப் பாடியதாகும். சோழர் காலத்தில், பெரிய புராணம் மாத்திரமன்றிப் பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணமும் கச்சியப்பரின் கந்தப்புராணமும் புராணவரிசையில் தோன்றின என்பர். இப்புராணங்களுள் தனிச்சிறப்புக்கள் சில உடையனவாகச் சேக்கிழாரின் பெரிய புராணம் விளங்குகின்றது''.

(பேராசிரியர், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை)

''தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தை அடுத்த 'திருநாகேஸ்வரம்' என்னும் சிவத்தலம் இருக்கின்றது. அது தேவாரப் பாடல்பெற்ற தலமாகும். அங்குள்ள கோவில் மிகப்பெரியது. சேக்கிழார் அக்கோவிலுக்கு அடிக்கடி சென்று தரிசிப்பது வழக்கம். அக்கோவில் எவ்வாறோ அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

சேக்கிழார் தமது ஊராகிய குன்றத்தூரில் 'திருநாகேஸ்வரம்' கோவிலைப் போன்ற ஒன்றைக் கட்ட விரும்பினார். சோழநாட்டுத் திருநாகேசுவரத்தை எப்பொழுதுமே தரிசிக்க இயலாது அல்லவா? தமது ஊரில் அத்தகைய கோவில் இருந்தால் தமது ஓய்வுக்காலத்தில் அதனைத் தரிசித்துக் கொண்டிருக்கலாம் என்று அவர் எண்ணினார். அதனால் அப்பெரியார் குன்றத்தூரில் இன்று நாம் காணும் 'திருநாகேசுவரம்' என்னும் சிவன்கோவிலைக் கட்டினார். இக்கோவிலில் சேக்கிழாருக்குத் தனிக்கோவில் எழுப்பப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் அவருக்குச் சிறப்பான முறையில் திருவிழாச் செய்யப்படுகிறது.

டாக்டர். மா. இராசமாணிக்கனார்
(சேக்கிழார்: பக். 46-47)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org